


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜூன். 06, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 242 ❖ ரூ.10

## இன்றைய தலைமுறை இளைஞர்களிடம் ஆங்கில திறன் குறைபாடு உள்ளது

# வலியுறுத்தல்

## தமிழகத்தில் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும் ஊட்டியில் நடைபெற்று வரும் துணைவேந்தர்கள் மாநாட்டில் கவர்னர் ஆர்.என். ரவி வலியுறுத்தல்

**ஊட்டி , ஜூன்.6–**

**நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள ராஜ்பவனில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பங்கேற்ற மாநாடு நேற்று காலை தொடங்கியது. மாநாட்டிற்கு கவர்னர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். மாநாடு தொடங்கியவுடன் ஒடிசா ரெயில் விபத்தில் இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டி ஒருநிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.**

தமிழ்த்தாய் வாழ்த்து பாடல், தேசிய கீதம், பாரதியார் பாடல் இசைக்கப்பட்டு மாநாடு தொடங்கப்ப ட்டது. மாநாட்டில் கவர்னர் ஆர்.என். ரவி, துணை வேந்தர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடி விட்டு பேசினார். கவர்னர் ஆர்.என். ரவி பேசியதாவது:- இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் தமிழகத்துடன் போட்டி போடும் அளவிற்கு முன்னேறியுள்ளது. தமிழகத்தில் உள்ள கல்வி முறையை இளைஞர்களின் திறன் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாற்ற வேண்டும். தமிழகத்தில் அடிப்படை கல்விக்கு மட்டுமின்றி உயர்கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.



இளைஞர்களுக்கு திறனுக்கு ஏற்ற கல்வி வழங்கப்படாததால், மாநில மற்றும் தேசிய வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது தேசிய கல்வி கொள்கையில், இளைஞர்களுக்கு, அவர்களின் திறமைக்கு ஏற்ப கல்வி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களுக்கு அவர்கள் படித்த படிப்புக்கு ஏற்ற வேலை என்பது கிடைப்பது இல்லை. இன்றைய தலைமுறை இளைஞர்களிடம் பெரும்பாலும் ஆங்கில திறன் குறைபாடு உள்ளது. தொழில் நுட்பங்கள் வளர்ந்து வருவதால் அதற்கு ஏற்ப தமிழகத்தில் கல்வி முறைகளிலும் மாற்றம் கொண்டு வர வேண்டும். இதுதவிர பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுக்கு பொறியியல் பட்டதாரிகளை விட நல்ல வேலை கிடைக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த மாநாட்டில் தமிழ்மொழியில் கிடைக்காத பாடப்புத்தகங்கள், குறிப்பு புத்தகங்கள், ஆய்வு பொருட்கள் பல்கலைக்கழகங்களால் கண்டறியப்பட்டு, தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களில் தமிழில் கற்பித்தல், கற்றல் செயல்முறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. மாநாட்டில் பல்கலைக்கழக மானியக்குழு தலைவர் எம்.ஜெகதீஷ் குமார் காணொலி மூலம் பங்கேற்று துணை வேந்தர்களுடன் கலந்துரையாடினார். பாரதிய பாஷா சமிதி தலைவர் சாமு கிருஷ்ணா சாஸ்திரி, லக்னோ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அலோக் குமார் ராய், இந்திராகாந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழக துணை வேந்தர் மற்றும் தலைவர் நாகேஸ்வரராவ் மற்றும் அனுவாதினி மொழி பெயர்ப்புக்கருவிநிறுவனர் புத்தா சந்திரசேகர் ஆகியோரும் மாநாட்டில் உரையாற்றினர்.

இந்த மாநாட்டில் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகத்தை சேர்ந்ததுணைவேந்தர்கள், முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர். நேற்று தொடங்கிய துணைவேந்தர்கள் மாநாடு இன்றும் நடக்கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக சனிக்கிழமையே கவர்னர் ஆர்.என்.ரவி ஊட்டிக்கு வந்துவிட்டார். ஊட்டி ராஜ்பவனில் வருகிற 9-ந் தேதி வரை தங்கியிருக்கும் கவர்னர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோடு, முக்கிய கோவில்களுக்கும் செல்ல உள்ளதாக தெரிகிறது. இதனையொட்டி ஊட்டியில் 700-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## அரசு மதுவால் தொடரும் உயிர் பலியை என்ன சொல்லி சமாளிக்க போகிறீர்கள்? அண்ணாமலை

சென்னை , ஜூன்.6–

தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:- சில நாட்களுக்கு முன்னர் மது பாட்டிலுக்குள் இறந்த நிலையில் பல்லி கிடந்த செய்தி வெளிவந்தது. தற்போது மதுபாட்டிலுக்குள் பாசி மிதப்பதாக செய்தி வெளிவந்துள்ளது. மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கும்



விதமாக மதுரை மாவட்டத்தில் டாஸ்மாக் மதுக்கடையில் மது வாங்கி குடித்த இருவர் மயக்க மடைந்து வீழ்ந்த நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்திருக்கிறார்.

மற்றொருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருக்கிறார். தெருவுக்கு தெரு மதுக்கடைகள் திறந்து வைத்ததின் விளைவாக மேலும் ஒரு துன்பகரமான நிகழ்வு நேற்று நடந்திருக்கிறது. 16 வயது பள்ளி மாணவி ஒருவர் தந்தையின் குடி பழக்கத்தால் வேதனை அடைந்து தற்கொலை செய்துள்ளார். ஆனால் இவற்றை பற்றி கவலை இல்லாத தி.மு.க. மது ஆலைகள் நடத்தும் தங்கள் கட்சி காரரர்களும், சாராய அமைச்சரும் சம்பாதிக்க ஏழை-எளிய மக்களை பலி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

கள்ளச்சாராய விற்பனையை தடுக்க திறனில்லாத தி.மு.க. அரசு தற்போது அரசு மதுக்கடைகளில் விற்கப்படும் மதுவால் தொடர்ந்து ஏற்படும் உயிர் பலிகளை என்ன சொல்லி சமாளிக்கப்போகிறீர்கள். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்கோட்டையில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு முதன்மைக்கல்வி அலுவலர் மரக்கன்றுகளை நட்டார்

**புதுக்கோட்டை, ஜூன்.6–**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக வளாகத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மா. மஞ்சுளா தலைமை தாங்கி மரக்கன்றுகளை நட்டு உலகச்சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவம் குறித்தும், மரக்கன்றுகள் நடவேண்டியதின் அவசியம் பற்றியும், உலகவெப்பமயமாதலை தடுக்கவேண்டியதின் அவசியம் பற்றியும் எடுத்துக்கூறினார்.



இந்த நிகழ்ச்சியில் அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொறுப்பு ) முருகேசன் தனியார் பள்ளிகள் மாவட்டகல்விஅலுவலர்( பொறுப்பு ) ஜெயராஜ் முதன்மைகல்விஅலுவலக நேர்முக உதவியாளர்( பொ) முருகையன், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாலை செந்தில் பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி முதன்மைக் கல்வி அலுவலகமுகாம்எழுத்தர் காஞ்சனா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## ஆந்திரா குண்டூர் அருகே டிராக்டர் கவிழ்ந்து 6 பேர் உயிரிழப்பு

ஐதராபாத், ஜூன்.6–

ஆந்திர அருகே உள்ள குண்டூர் மாவட்டம் பத்திப்பாடு என்ற பகுதியில் டிராக்டர் கவிழ்ந்து 6 பேர் உயிரிழந்தனர். ஆந்திர பிரதேசம் மாநிலம் செப்ரோலு மண்டலத்தில் உள்ள ஜூபுடி பகுதியில் நடைபெற்ற உறவினர் இல்ல சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சுமார் 40 பேர் டிராக்டரில் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது குண்டூர் மாவட்டத்தில் வத்திசெருகூரில் சென்றபோது திடீரென டிராக்டர் பள்ளத்தில் கவிழ்ந்து



விபத்துக்குள்ளானது.

இந்தபயங்கரவிபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இதையடுத்து இந்த விபத்து குறித்து தகவல் அறிந்து வந்த போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டு காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்தில் உயிரிழந்தவர்கள் பிரத்திபாடு மண்டலம் கொண்டேபாடு பகுதியைச் சேர்ந்த மிக்கிலி நாகம்மா, மாமிடி ஜான்சிராணி, கட்டா நிர்மலா, கரிகாபுடி மேரிம்மா, கரிகாபுடி ரத்னகுமாரி மற்றும் கரிகாபுடி சுஹாசினி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதைத்தொடர்ந்து இந்த விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் உயிரிழப்புகள் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. பக்கத்து கிராமத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

## பிடிபட்டது அரிசிக்கொம்பன் : சின்னமனூர் அருகே அரிசிக்கொம்பன் யானையை மயக்க ஊசி செலுத்தி வனத்துறையினர் பிடித்தனர்

தேனி,ஜூன்.6–

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே அரிசிக்கொம்பன் யானை இரண்டு மயக்க ஊசி செலுத்திபிடிக்கப்பட்டது. 3 கும்கி யானைகள் உதவியுடன் லாரியில் ஏற்றி வனத்துறையினர் மாற்று இடத்திற்கு கொண்டுசெல்கின்றனர்.



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் சுற்றித்திரிந்த அரிசிக்கொம்பன் யானை கடந்தமாதம் அந்தமாநில வனத்துறையினரால் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டு தமிழகத்தை ஒட்டிய வனப்பகுதியில் விடப்பட்டது. அதன்பிறகு அரிசிக்கொம்பன் யானை தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் நுழைந்தது. இதனால் தமிழக வனத்துறையினர் யானையைபிடிக்கமுயற்சி மேற்கொண்டனர், சுமார் ஒருவாரத்திற்கும் மேலாக போராடி நேற்று இரண்டு மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டுள்ளது.

அரிசிக்கொம்பன் யானை பிடிக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது, இந்த யானையை மீண்டும் வனப்பகுதியில் விடக்கூடாது, முகாமில் வைத்து பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் விவசாய நிலம் பாதுகாக்கப்படும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரிசிக்கொம்பன் யானையை முகாமில் அடைக்கக் கூடாது என கேரள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால் தான் கேரள மாநில அரசு யானையை பிடித்தபோது, மீண்டும் அடர்ந்த காட்டுக்குள் கொண்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் சுற்றித்திரிந்த அரிசிக்கொம்பன் யானை கடந்தமாதம் அந்தமாநில வனத்துறையினரால் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டு தமிழகத்தை ஒட்டிய வனப்பகுதியில் விடப்பட்டது. அதன்பிறகு ஹைவேவிஸ் மலைகிராமங்களில் சுற்றித்திரிந்த அந்த யானை கடந்த மாதம் 27-ந்தேதி கம்பம் நகருக்குள் நுழைந்து சாலையோரம் இருந்த வாகனங்களை சேதப்படுத்தியது.

அதனை பிடிக்க தமிழக வனத்துறையினர் கண்காணிப்பு சோதனைச்சாவடி அமைத்து மயக்க ஊசி செலுத்த முயன்று வந்தனர். ராயப்பன்பட்டி அருகில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரம் சண்முகாநதி அணைப்பகுதியில் கடந்த சில நாட்களாக அந்த யானை உலாவி வந்தது. இதனால் காமய கவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, கே.கே. பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மின்தடை செய்யப்பட்டது. அப்பகுதியை ஒட்டியுள்ள தோட்டங்களுக்கு தொழிலாளர்கள் யாரும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது.

அரிசி கொம்பன் யானையை மயக்க ஊசி செலுத்தி பிடிக்க 4 டாக்டர்கள் 2 குழுவாக பிரிந்து 24 மணி நேரமும் கண்காணித்து வந்தனர். மூணாறு சின்னக்கானல் பகுதியில் அரிசிகொம்பன் யானையை மயக்க ஊசி செலுத்தி பிடித்த குழுவில் இருந்தகேரளடாக்டர்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி அரிசி கொம்பன் யானையைபிடிக்கமுடிவு செய்தனர். சண்முகா நதி அணை பகுதியில் முகாமிட்டுள்ள யானை மேகமலை நோக்கி சென்றது. இதனை வனத்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். இந்தநிலையில் தற்போது சின்னமனூர் அருகே அரிசிக்கொம்பன் யானை பிடிபட்டுள்ளது

## நேரு யுவகேந்திரா சார்பில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை நிகழ்ச்சி

**புதுக்கோட்டை , ஜூன்.6–**

இந்திய அரசு புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவகேந்திரா சார்பில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை நிகழ்ச்சியின் ஒருபகுதியாக சிறு தானியங்கள் மூலிகைகள் மற்றும் சிறுதானிய உணவுகள் கண்காட்சி புதுக்கோட்டை அன்னை கேட்டரிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு 5.6.23 அன்று சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை என்னும் தலைப்பின்கீழ் சிறுதானியஉணவுவகைகள் மற்றும் மூலிகைகளின் முக்கியத்துவத்தை இளம் தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் விதமாக கண்காட்சி மற்றும் இளையோர் கருத்தரங்கத்தினை புதுக்கோட்டை மாவட்ட நேருயுவகேந்திரா, அன்னை கேட்டரிங் கல்லூரி மற்றும் சுவாமி விவேகானந்தர் மகளிர் மன்றம் ஆகியவை இணைந்து நடத்தின.


நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் அலுவலர் ஜோயல் பிரபாகர் தலைமையில் அன்னை கேட்டரிங் கல்லூரி தாளாளர் அருள் வல்லப ராஜ் முன்னிலையில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வகுமார் சிறுதானிய கண்காட்சியினை துவக்கி வைத்தார். கண்காட்சியில் சுற்றுச்சூழல் மேம்பாட்டு ஆர்வலர்களான பல்வேறு தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு சிறு தானியங்களை அடிப்படையாகக் கொண்ட தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர். தொடர்ந்து நடைபெற்ற இளையோர் கருத்தரங்கில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதிமொழியினை நேரு யுவ கேந்திரா திட்ட உதவி அலுவலர் ஆர். நமச்சிவாயம் வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

விழாவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டு செயல்பாட்டாளர் மரம் ராஜாவிற்கு நேரு யுவகேந்திரா சார்பில் பாராட்டு சான்றிதழும் கேடயமும் வழங்கப்பட்டது. மேலும் விழாவில் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணிப்பைகளை பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டு அதன்படி விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் மஞ்சள் நிறதுணிப்பைகள் வழங்கப்பட்டன. விழாவில் சுமார் 150 இளைஞர்களும் இளம்பெண்களும் பொதுமக்களும் பங்கேற்றனர். நிறைவாக புத்தாஸ் வீரக்கலைகள் கழக நிறுவனர் சேது கார்த்திகேயன் அனைவருக்கும் நன்றி கூறினார். விழாஏற்பாடுகளை அன்னை கேட்டரிங் கல்லூரிநிர்வாகத்தினருடன் நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர்கள் முத்துமாரி மற்றும் வாசு ஆகியோர் செய்திருந்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில்

## ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருத்தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றது



ஆவுடையார்கோவில், ஜூன்.6–

ஆவுடையார்கோவில் தாலுகா ஆவுடையார்கோவில் குறிச்சிகுளத்தில் அமைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்திருவிழா நடைபெறுவது வழக்கம், விழாவினையொட்டி திருத்தேரோட்டம் நடைபெறும். ஏற்கனவே பூச்சொரிதல் விழா சிறப்பாக நடைபெற்று இருந்த வேளையில் இந்தாண்டு நடைபெற்ற திருவிழாவில் கடந்த 28ம் தேதி காப்புக்கட்டுதலுடன் விழா தொடங்கியது.11 நாட்கள் நடைபெறுகின்ற விழாவில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனையுடன் தினம்தோறும் அம்மன் வீதி உலாவும் நடைபெற்று வந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று திருத்தேரோட்டம் நடைபெற்றது, முன்பாக திருத்தேரில் அம்மனை எழுந்தருளச் செய்து சிறப்பு பூஜைகள், தீபாராதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து ஊர் முக்கியஸ்தர்கள், கிராம பொதுமக்கள் முன்னிலையில் பக்தர்கள் தேரை வடம் தொட்டு இழுத்தனர். ஆவுடையார்கோவில் 4 ரத வீதிகளிலும் வலம் வந்த திருத்தேரில் அமர்ந்திருந்து ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள்பாலித்தார்.

மேலும் பக்தர்கள் வேண்டுதல்களை நிறைவேற்றித்தர வேண்டி பால்குடம், காவடி, பறவைக்காவடி மற்றும் அலகு குத்தி வழிபாடு செய்தனர். விழாவில் சுற்று வட்டார பொதுமக்கள் ஆன்மீக மெய்யன்பர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.இந்தக் கோயிலுக்கு தினம்தோறும் சிறப்பு பூஜைகள் செய்து வாணவேடிக்கைகள் நடத்தி அம்மன் வீதி உலா நிகழ்வும் நடைபெற்று கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இன்று மாலை தீமிதி திருவிழாவும், நாளை பதினோராம் நாள் திருவிழாவான தெப்பத் திருவிழாவும் நடைபெறுவதுடன் நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. ஆவுடையார் கோவிலில் காவல் நிலைய காவலர்கள் சிறப்பான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## கடையநல்லூரில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நகர அலுவலகம் சார்பாக காயிதே மில்லத் 128 வது பிறந்தநாள் விழா



தென்காசி,ஜூன்.6–

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நகர அலுவலகம் சார்பாக காயிதே மில்லத் 128 வது பிறந்தநாள் விழா கடையநல்லூர் முஸ்லீம் சார்பாக கொடியேற்று விழா நடைபெற்றது. நகரத் தலைவர் தலைமை செய்யது மசூது, முன்னிலை எஸ். கே. எம். ஹபிபுல்லா இளைஞர் அணி மாநிலத் துணைத் தலைவர், முகமது மைதீன் தொழிற்சங்க மாநிலத் துணைத் தலைவர் முகம்மது மைதீன், தொழிற்சங்க மாநிலத் துணைத் தலைவர் முகம்மது இஸ்மாயில், நல்லாசிரியர் செய்யது மசூது, முஸ்தபா, ஆசிரியர் ஹைதர் அலி, சேக் அப்துல் காதர், இமாம், காஜா மைதீன் கவுன்சிலர் முகமது மைதீன், அப்பாஸ் துலாப்ஸா மாவட்ட அரசு காஜி முகைதீன், அப்துல் காதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரச்செயலாளர் அயூப் கான் அனைவரையும் வரவேற்றார், மாநில அமைப்பு செயலாளர் நெல்லை மஜித், அப்துல் மஜீத் முஸ்லிம் லீக் கொடியேற்றினார், நகரப் பொருளாளர் திவான் மைதீன், ஹிந்தி அப்துல் மஜீத், அப்துல் ரகுமான், அப்துல் ஜமாத், முஸ்லீம் மாணவர் பேரவை நிர்வாகிகள் நசீர் இர்பான், இம்ரான், சைபுல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டு புதிய பேருந்து நிலையம், காயிதே மில்லத் மல்சில், பிலால் மசூதி, சக்கரையா முஸ்லிம் லீக் சங்கம், தாரூல் சங்கம், பெரிய தெரு, ரஹ்மானியாபுரம் ஆகிய இடங்களில் முஸ்லிம் லீக் கொடி ஏற்றப்பட்டது.






தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் புதிய பேருந்து நிலையம் முன்பாகநகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஒரிசாவில் நடந்த கோர ரயில் விபத்தில் உயிரிழந்த சொந்தங்களின் ஆத்மா சாந்தியடைய மோட்ச தீபம் ஏற்றி இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமை சுப்பிரமணியன் நகரத் தலைவர், முன்னிலை மாரி, ஜெயக்குமார், சங்கரநாராயணன் நகர் மன்ற உறுப்பினர், ரெங்கராஜ், காளிமுத்து, கார்த்திக், மாரி ராஜ், சூரிய பிரகாஷ், கருப்பசாமி, மகேந்திரன், லெட்சுமணன், முப்புடாதி, மாரீஸ்வரன், மாரி, பாலீஸ்வரன், கார்த்திக், ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு தீபமேற்றி அஞ்சலி செலுத்தி வழிபட்டனர்.

## உலகச் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு

## கந்தர்வகோட்டையில் மரக்கன்றுகள் நட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் கொண்டாட்டம்



கந்தர்வகோட்டை, ஜூன்.6–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் வெள்ளாளவிடுதி அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கந்தர்வகோட்டை வட்டார கிளையின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு வட்டாரத் தலைவர் ரகமதுல்லா தலைமை வகித்தார், இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அறிவியல் இயக்க புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் முத்துக்குமார் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு உலக சுற்றுச்சூழல் தினம் குறித்து பேசியதாவது, உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

நம் சுற்றுச்சூழலை நாமே பாதுகாப்பது மிக முக்கியமாகும். மரங்கள் இல்லை என்றால் நாம் சுவாசிக்க காற்று கூட கிடைக்காது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதால் வெப்பநிலை பல மடங்கு உயரும் அபாயமும் உள்ளது. எனவே காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கவேண்டும். அதே நேரத்தில் ஒரு பகுதியில் கடும் வறட்சி, மற்றொரு பகுதியில் கடும் வெள்ளம், சூறாவளி இயற்கை சீற்றங்கள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. இதனால் பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. பருவநிலை மாற்றம் காரணமாகவும் வெப்பநிலை அதிகரிக்கிறது. இதனால் பனிப்பாறைகள் உருகி கடல்நீர்மட்டம் உயரும் ஆபத்து உள்ளது.

மரம் நடுவது, காடுகள் வளர்ப்பது, மரபு சாரா ஆற்றல் மூலங்களை பயன்படுத்துவது, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலை கழிவுகளை வெளியேற்றுவது, அதிக மாசுபாட்டை உண்டாக்கும் திட்டங்களை கைவிடுவது இவற்றால் மட்டுமே சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மறுசீரமைப்பு செய்யவும் முடியும். எனவே மரம் அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலை பாதுகாப்பது நமது ஒவ்வொருவரின் கடமை. இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது. நவீன வளர்ச்சி என்ற பெயரில் அதிகரித்த பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு காரணமாக பூமியின் இயற்கை வளம் பாதிக்கப்படுகிறது. 'பிளாஸ்டிக் மாசுவுக்கு தீர்வு என்பது இந்தாண்டின் மையக்கருத்து என்றும் பேசினார்.

இதில் வெள்ளாவிடுதி அறிவியல் இயக்க கிளை நிர்வாகிகள் கோமதி, விஜி, மகாலெட்சுமி, கௌசல்யா, ரஷியா ஆகியோர் நிகழ்விற்கான ஏற்பாடுகள் செய்திருந்தனர், இதில் பெற்றோர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## உளுந்தூர்பேட்டையில் பொதுமக்களுக்கான வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி தொடங்கியது




கள்ளக்குறிச்சி, ஜூன்,06_

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கல்வராயன்மலை, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை ஆகிய 6 வட்டங்களிலும் 1432-ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி நேற்று முதல் 19-ம் தேதி வரை அரசு விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களை தவிர்த்து ஏனைய நாட்களில் வருவாய் தீர்வாய அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி,

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ள உளுந்தூர்பேட்டை, எலவனாசூர்கோட்டை, எறையூர், களமருதூர், திருநாவலூர், செங்குறிச்சி ஆகிய 6குருவட்டங்களில் 151 கிராமங்கள் உள்ளடங்கியுள்ளது, இதில் முதல் கட்டமாக நேற்று எறையூர் குருவட்டத்தில் உள்ள காட்டுஎடையார், பெரியகுருக்கை, தானம், எறையூர், பல்லவாடி, மயிலாடும்தாங்கள், கூவாடு, நெய்வனை, தேன்குணம், எதலவாடி, அதையூர், பிள்ளையார்பாளையம், நத்தாமூர், எ.அத்திப்பாக்கம் ஆகிய 14கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் ஜமாபந்திநிகழ்ச்சிமாவட்ட வருவாய் அலுவலர் சத்யநாராயணன் தலைமையில், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தொடர்ந்து நேற்று பெறப்பட்ட பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை விரைந்து ஆய்வு மேற்கொண்டு இணையதளத்தில் பதிவு செய்து, உடனடியாக 15 பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ராஜி, வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், உதவியாளர்கள், பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் தங்கள் குறைகளை கோரிக்கைமனுக்களாக வழங்கினர்.

## வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக சுற்றுச் சூழல் தின விழா



வம்பன்,ஜூன்.6–

புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலகசுற்றுச்சூழல்தினம்கொண்டாடப்பட்டது.


இதில் விவசாயிகள் மற்றும் வேளாண்பட்டய படிப்பு மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்தவிழாவில் வீ.விஜயலட்சுமி வரவேற்புரை ஆற்றினார், அதனைத் தொடர்ந்து தலைமை உரையாற்றிய திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஆ.யுவராஜா மனிதனுக்கும் சூழலுக்கும் இடையேயான தொடர்பையும் அதில் ஏற்பட்டு வரும் சீர்கேடுகளையும் அதனை தடுக்கும் முறைகளையும் எடுத்துரைத்தார். குறிப்பாக பிளாஸ்டிக் உபயோகத்தை குறைக்கும் முறைகளையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்தி பேசினார்.

விழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் பருவ சூழ்நிலைக்கு ஏற்ற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக மக்காச்சோள இரகங்களை பற்றிவேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளிடம் கேட்டறிந்தனர், விழாவின் இறுதியில் பங்கேற்ற 103 பங்கேற்பாளர்களுக்கும் மூலிகைகீரை வகையான தவசி முருங்கை செடி கொடுக்கப்பட்டது.



உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் புதுக்கோட்டை மாவட்ட வன அலுவலர் முன்னிலையில் மரக் கன்று நடப்பட்டது. உடன் பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் உள்ளனர்.

## தென்காசி மாவட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சி புதிய உறுப்பினர் சேர்க்கை ஜூன் 10ல் நடைபெறுகிறது : முகம்மது யாகூப் தகவல்



தென்காசி, ஜூன். 6–

தென்காசி மாவட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் 2023 ஆம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி நடத்துவதற்கு மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா உத்தரவின் பேரில் தென்காசி மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி சார்பில் வருகின்ற ஜூன் 10 முதல் இந்த ஆண்டிற்கான உறுப்பினர் சேர்க்கை தென்காசி மாவட்டத்தில் ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்க்க நடத்தப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் உள்ள கிளை நிர்வாகிகள் புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர், வருகின்ற ஜூன் 10ஆம் தேதி நிகழ்ச்சியை மாவட்ட தலைவர் முகம்மது யாகூப் தலைமையில் மனித நேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் முன்னாள் கவுன்சிலர் சலீம் தமுமுக மாவட்ட செயலாளர் அப்துல் ரகுமான், மாவட்டப் பொருளாளர் பாசித் ஆகியோர் முன்னிலையில் தமுமுக துணை பொதுச் செயலாளர் மைதீன் சேட்கான் துவக்கி வைக்க உள்ளார், தென்காசி மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடிய கட்சி நிர்வாகிகள் தீவிரமாக புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நிகழ்ச்சிக்கு தயாராகி வருகின்றனர், முதல் கட்டமாக 25 ஆயிரம் உறுப்பினர்களை சேர்க்க உள்ளனர் கிளைகளில் நிகழ்ச்சி நடைபெறும் போது கிளையின் தலைவர் தலைமையேற்று கிளையின் மற்ற பொறுப்பாளர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெறுவதாகவும் ஒவ்வொரு கிளைகளுக்கும் ஒவ்வொரு பொறுப்பாளர்களை நியமனம் செய்து மாவட்டத்தினுடைய பொறுப்பாளர்கள் கண்காணிப்பாளராக செயல்படுவார்கள் என்று கட்சியின் மாவட்டத் தலைவர் முகம்மது யாகூப் தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து மறைந்த கண்ணியமிகு காயிதே மில்லதின் 128-வது பிறந்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, மாவட்டப் பொருளாளர் சரவணன், நகரச் செயலாளர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் ஜிந்தா மைதீன், வார்டு செயலாளர்கள் வீரமணி, வீராசாமி, சிவா, வக்கீல் சதிஷ்,மாணவரணி கார்த்தி, சிவாஜி, ஜான், பாரதிராஜா, ஜெயக்குமார், பிரகாஷ், ஓய்வு பெற்ற வட்டாட்சியர் சூரியநாராயணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நல்லாடை ஊராட்சியில் புதிய ரேஷன் கடை திறப்பு விழா



தரங்கம்பாடி, ஜூன் 6–

மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் அருகே நல்லாடை ஊராட்சி கொங்கானோடை கிராமத்தில் புதிய பகுதிநேர ரேஷன் கடை திறப்பு விழா நடைபெற்றது.

நல்லாடை ஊராட்சி கொங்கானோடை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பகுதி நேர ரேஷன் கடை வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திங்கள்கிழமை அன்று பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளர் மாண நிவேதா எம்.முருகன் 170 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறும் வகையில் புதிய ரேஷன் கடையை திறந்து வைத்து பேசினார்.

நிகழ்ச்சியில் தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்டத் துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், செல்வமணி, ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக், ஊராட்சி மன்ற தலைவர் காவேரி ஜெயச்சந்திரன், வட்ட வழங்கல் அலுவலர் விஜயகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் கிருபாவதி சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமு மற்றும் கிராமவாசிகள் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வாணியஞ்சத்திரம் கிராமத்தில் உள்ள

# அருள்மிகு ஸ்ரீ ஏகாத்தம்மன் திருக்கோவிலில் 15-ம் ஆண்டு தீமிதி திருவிழாவில் 500 பக்தர்கள் தீ மிதித்தனர்





ஊத்துக்கோட்டை, ஜூன்6-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகாபுரம் ஊராட்சி, வாணியஞ்சத்திரம் கிராமத்தில் கிராம தேவதையான அருள்மிகு ஸ்ரீ ஏகாத்தம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் 15-ம் ஆண்டு தீமிதி திருவிழா நேற்று இரவு நடைபெற்றது. இதை முன்னிட்டு வெள்ளிக்கிழமை காலை கணபதி ஹோமம், கொடியேற்றும் நிகழ்ச்சி, கங்கை நீர் திரட்டி பால்குடம் எடுத்து வரும் நிகழ்ச்சி,காப்பு கட்டும் நிகழ்ச்சி,அம்மனுக்கு கூழ்வார்த்தல்,விளக்கு பூஜை உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் தீமிதி திருவிழா நிகழ்ச்சி துவங்கியது.

செவ்வாய்க்கிழமை கெங்கையம்மனுக்கு கூழ் வார்த்தல்,பொங்கல் வைத்தல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. புதன்கிழமை கரகம் ஊர் எல்லையை சுற்றி வரும் நிகழ்ச்சியும்,படையல்போடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. வியாழக்கிழமை மதியம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி, வெள்ளிக்கிழமை நாகாத்தம்மனுக்கு பொங்கல் வைத்து படையல் போடும் நிகழ்ச்சி,முளைப்பாரி கண் திறப்பு நிகழ்ச்சி,அம்மன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.

சனிக்கிழமை மதியம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும், மாலை அக்னிசட்டிஏந்திதிருவீதிஉலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை காலை அம்பாளுக்கு தூப தீப ஆராதனையும்,மாலை காப்பு கட்டி விரதம் இருந்த 500 பக்தர்கள் ஊர் எல்லையில் கங்கை நீராடினர். பின்னர்,அந்த பக்தர்களை அம்மன் அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன்பின்னர், கோவில் அருகே அமைக்கப்பட்டு இருந்த தீகுண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர். இதன்பின்னர், பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று காலை அம்பாளுக்கு வசந்த உற்சவம் என்னும் மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சி பின்னர்,சுவாமி திருவீதி உலாவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்திருந்தனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கன்னிகாபுரம்-வாணியஞ்சத்திரம் கிராம பொதுமக்களும், விழா குழுவினர்களும், பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆட்டோவில் வந்து ஆரணியில் கஞ்சா விற்க முயன்ற சென்னையைச் சேர்ந்த 4 பேர் சிறையில் அடைப்பு

ஊத்துக்கோட்டை, ஜூன்6-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் நேற்று மாலை வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஆரணி மசூதி அருகே சென்றுகொண்டிருந்த ஒரு ஆட்டோவை போலீசார் நிறுத்துமாறு சைகை காட்டினர்.ஆனால்,அந்த ஆட்டோ நிற்காமல் சென்றது.

அதனை போலீசார் விரட்டி சென்று மடக்கி பிடித்தனர்.அப்பொழுது அந்த ஆட்டோவில் இருந்த நான்கு பேரை பிடித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்பொழுது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறினர்.எனவே, அவர்கள் மீது சந்தேகம் அடைந்த போலீசார் அவர்களை சோதனை செய்தனர்.அப்பொழுது அவர்கள் சுமார் 200 கிராம் எடை கொண்ட தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சாவை மறைத்து வைத்து விற்பனை செய்ய முயன்றது தெரியவந்தது.

எனவே, போலீசார் ஆட்டோவுடன் கஞ்சாவை பறிமுதல் செய்து நான்கு பேரையும் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். விசாரணையில் அவர்கள் சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ராம்குமார்(வயது37), வடபழனியை சேர்ந்தவர்களான மணிமாறன்(வயது28), பாண்டியன்(45),சத்திய சிரஞ்சீவி(வயது35) என்பதும் சென்னை புளியந்தோப்பில் இருந்து கஞ்சாவை வாங்கி வந்து விற்பனை செய்ய முயன்றதும் தெரிய வந்தது.

எனவே, அவர்கள் நான்கு பேர் மீதும் ஆரணி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து புழல் சிறையில் அடைத்தனர்.



கஞ்சா விற்பனை செய்ய முயன்றதாக சிறையில் அடைக்கப்பட்ட சென்னையைச் சேர்ந்த 4 பேரை படத்தில் காணலாம்.

# பள்ளிகள் விரைவில் துவங்க உள்ள நிலையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயணிக்கும் பேருந்துகளை ஆய்வு செய்த அமைச்சர்





காரைக்கால்,ஜூன்,6

காரைக்கால் மாவட்டத்தில் பள்ளிகள் விரைவில் துவங்க உள்ள நிலையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயணிக்கும் பேருந்துகளை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் விஷ்ணுகுமார் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன வட்டார போக்குவரத்து அதிகாரி அங்காலன் மற்றும் கல்விமாறன் ஆகியோர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

போக்குவரத்து துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில் ஒவ்வொரு ஆண்டும் பேருந்துகள் ஆய்வு மேற்கொள்வது வழக்கம் என்றும் காரைக்கால் மாவட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணிப்பதால் பள்ளி மாணவர்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக இது போன்ற ஆய்வுகள் நடத்தப்படுகின்றன என்றும் மேலும் தனியார் பள்ளி வாகனங்கள் மாணவர்கள் பயணிக்க பாதுகாப்பாகஉள்ளனவா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டன,எனதெரிவித்தார். பின்னர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை அமைச்சர் ,பள்ளி, கல்லூரி வாகனங்களில்ஒட்டினார்.

இது போன்ற வாகனங்கள் ஆய்வு அடிக்கடி நடைபெற வேண்டும் என்றும் போக்குவரத்து துறை மூலம் திடீர் ஆய்வு நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை இது போன்று திடீர் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். தனியார் பேருந்துகளில் மாணவர்கள் அதிகம் பயணிப்பதால் தனியார் பேருந்துகளையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். இதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் பஸ் உரிமையாளர்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அனைத்து ஓட்டுநர்களையும் அழைத்து வாகனங்கள் வேகமாக ஓட்டாமல் விபத்தை தவிர்க்க வேண்டும் என்றும் மாணவர்கள் பயணிக்கும் மாகாணம் என்பதால் பொறுப்புடன் செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்கள். மேலும் வாகனத்துக்கு உட்பட்ட அனைத்து பேப்பர்களும்வாகனத்தில் வைக்க வேண்டும் என்றும் உங்களுடைய லைசன்ஸ் முதற்கொண்டு அனைத்தும் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



சென்னை மணலி ஆமுல்லை வாயில் கிராமத்தில் ஒன்றிய அரசு நிறுவனமான CPCL பெட்ரோலியம் கார்ப்பரேஷன் எண்ணெய் நிறுவனத்தின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது. மணலி பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நிறுவன இயக்குனர் அரவிந்த் குமார் கலந்து கொண்டு பிளாஸ்டிக்கை ஒழிப்பதற்கு உறுதிமொழி ஏற்றனர். இதனையடுத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக புத்தகத்தை வெளியிட்டு ஊழியர்களுக்கு விதை பந்து வழங்கினார். இதனைத் தொடர்ந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து எல் இ டி திரை விழிப்புணர்வு பிரசார வாகனத்தை கொடி அசைத்து துவக்கி வைத்து கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பசுமை வளாகம் அமைப்போம் என அடிப்படையில் மரக்கன்றுகள் நட்டு வைத்தார்.இதில் ஊழியர்கள், மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதனையடுத்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு விதைப்பந்துகளுடன் மஞ்சப்பை வழங்கப்பட்டன.



செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி பேரூராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆர் ஆர் நகரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவில் சுமார் 200க்கும் மேற்பட்ட பழ வகை செடிகள், மூலிகைச் செடிகள், மரக்கன்றுகள் உள்ளிட்டவைகள் நடப்பட்டது இதனை பேரூராட்சி தலைவர் தசரதன், துணைத் தலைவர் சங்கீதாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர். இதில் பள்ளி மாணவர்கள் ஊழியர்கள் தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டு ஆர்வமுடன் மரக்கன்றுகளை நட்டனர்.



உலக சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் புதுச்சேரி மாநில வன பாதுகாப்பு துறை அதிகாரி மற்றும் மாவட்ட துணை ஆட்சியர் (பே. மே.) ஆகியோர் தலைமையில் கடற்கரையில் உள்ள அலையாத்தி காடுகளில் உள்ள பிளாஸ்டிக் பொருட்களை அகற்றும் பணி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் குடிமை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் ஆப்த்தமித்ரா தன்னார்வலர்கள் மேலும் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சதுப்பு நில காடுகளில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளை அகற்றினார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டினை காரைக்கால் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது,



புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள தாமரைக் குளத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு சட்டம் (அம்ருத் சரோவர்) நூரு நாள் வேலை திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை மேம்படுத்தவும் மற்றும் குலத்தை சுற்றி மரக்கன்றுகளை நடுவதற்கான பணியையும் நேற்று அமைச்சர் துவைக்கி வைத்தார். மேலும் சுற்றுச்சூழல் பேரனியையும் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு மகளிருடன் தேசியகொடியை ஏற்றி வைத்து உலக சுற்றுச் சூழல் தின உறுதி மொழியையும் எடுத்துக் கொண்டார்கள். இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சிவனேசன் உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சச்சிதானந்தம் காரைக்கால் நகராட்சி செயற்பொறியாளர் லோகநாதன் உள்ளிட்டவர்கள் இன்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். மேலும் காரைக்கால் உள்ள அனைத்து குளங்களும் இது போன்ற நீர்நிலைகள் மேம்படுத்தப்படும் எனவும் மறக்கன்றுகள நடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, திருவாலவாயநல்லூர் கண்மாய் கரையில் அமைந்துள்ள அருள்மிகு காமாட்சி அம்மன், அருள்மிகு சந்தன கருப்பசாமி மற்றும் 21 தெய்வங்கள், 64 சேனைகள் நிறைந்த திருக்கோவில் அஷ்டப்பந்தன மஹா கும்பாபிஷேக விழாவையொட்டி இக்கோயிலில் சிறப்பு விருந்தினராக அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன், அதிமுக மேலூர் ஒன்றிய பெருந்தலைவர் பொன்னுச்சாமி இவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தப்பட்டது. உடன் கோவில் திருப்பணி முயற்சியாளர் ஏட்டையா பாலுசாமி, கார்த்திகேயன் சிவாச்சாரியார், ஸ்தபதி சோமசுந்தரம் மற்றும் பலர் உள்ளனர்.

# காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் திடீர் தீ விபத்து



காஞ்சிபுரம், ஜூன்.6-

காஞ்சிபுரம் ரெயில்வே சாலையில் தலைமை அரசு மருத்துவமனை உள்ளது. இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து சகிச்சை பெற்று செல்கிறார்கள். இதனால் மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் கூட்டம் அதிகம் காணப்படும்.

இந்நிலையில் நேற்று காலை சுமார் 8 மணி அளவில் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு படையினர் கேமிரா அறையில் திடீரென தீ பற்றி எரிந்தது. இதனால் அங்கு கடும் புகை மூட்டம் ஏற்பட்டது. இதனால் மருத்துவமனை வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்ததும், காஞ்சிபுரம் தீயணைப்பு விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இதனால் அருகில் உள்ள மற்ற அறைகளுக்கு தீ பரவுவது தடுக்கப்பட்டது. மேலும் நோயாளிகள் சிகிச்சை பெறும் அறைகள் அருகில் இல்லாததால் பெரிய அளவில் அசம்பாவிதம் ஏற்படவில்லை. மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அரசு மருத்துவமனையில் தீவிபத்து ஏற்பட்ட சம்பவம் காஞ்சிபுரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### சீர்காழியில் பாயாசம் சரி இல்லை,

# ஊத்துடா சாம்பார முஞ்சில, திருமண நிச்சயதார்த்த விழாவில் மோதிக்கொண்ட இரு தரப்பினர்



சீர்காழி,ஜூன்,6

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தெற்கு ரத வீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமண நிச்சயதார்த்த விழாவில் மணமகன் வீட்டார் - பெண் வீட்டார் இருவரும் மண்டபத்தில் வாசலில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக சீர்காழி போலீசார் தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்று இரு தரப்பையும் சமாதானம் செய்து விசாரணை செய்ததில், நிச்சயதார்த்த விழாவிற்கு வந்தவர்கள் உணவு உட்கொண்ட பொழுது பாயாசம் போட்டுள்ளனர்.

அப்பொழுது பாயாசம் சரியில்லாததால் அதனை பெண் வீட்டார் தட்டி கேட்டு, தகாத வார்த்தையால் திட்டியதாக கூறப்படுகிறது. இதனால் மாப்பிள்ளை வீட்டார் தரப்பில் ஆத்திரமடைந்து சாம்பாரை பெண் வீட்டார் மீது ஊற்றியதாகா கூறப்படுகிறது.

இதனால்இருதரப்பினரும் கைகளப்பாகி மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனால் திருமண நிச்சயதார்த்தத்திற்கு வந்தவர்கள் சாப்பாடு சாப்பிடும் போது டேபிள், சேர் தள்ளிவிட்டு ரகலையில் ஈடுபட்டுள்ளனர், மண்டப வாசலிலல் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் அடித்து கொண்ட வீடியோ சமூக வளைதலத்தில் வேகமாக பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது இதுகுறித்து சீர்காழி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சமாதான செய்து இருதரப்பையும் அனுப்பி வைத்தனர்

# சீர்காழி திருவிக்ரம நாராயண பெருமாள் கோவிலில் தெப்ப திருவிழா: திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்



சீர்காழி,ஜூன்,6

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 108 திவ்ய தேசங்களில் 28-வது திவ்ய தேசமான தாடாளன் பெருமாள் என்னும் திருவிக்ரம நாராயணப்பெருமாள் கோயில் உள்ளது. மூலவர் பெருமாள் தனது இடது பாதத்தை வான் நோக்கி தூக்கி உலகளந்த பெருமாளாக காட்சி தருகிறார். பிரசித்தி பெற்ற இக்கோவிலில் வைகாசி மாத பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் விமர்சையாக தொடங்கி நடைபெற்று வருகிறது.

விழாவில் முக்கிய நிகழ்வாக தெப்ப திருவிழா நேற்று நடைபெற்றது.

முன்னதாக பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம், சாத்துமுறை, புஷ்ப அலங்காரம் நடைபெற்றது, தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் லோகநாயகி தாயருடன் பெருமாள் தெப்பத்தில் எழுந்தருளி மூன்று முறை சுற்றிவந்து மகா தீபாராதனை காட்டப்பட்டது. இதனை காண ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# சீர்காழி அருகே புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் 31 ஆண்டுகளுக்குப் பிறகு முன்னாள் மாணவர்கள் நெகிழ்ச்சி சந்திப்பு

### படித்த கல்லூரிக்கு ரூ.2 லட்சத்தில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தி தந்தனர்



சீர்காழி, ஜூன்,6

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூர் சீனிவாசா சுப்பராயா அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 1989 ஆம் ஆண்டிலிருந்து 92 ஆம் ஆண்டு வரை கட்டடவியல், மின்னியல், மின்னணுவியல், இயந்திரவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சேலம், திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம் உள்ளிட்ட பல மாவட்டங்களிலிருந்து வந்து கல்வி பயின்று, பிறகு ஒவ்வொருவரும் தமிழ்நாடு, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளிலும் சென்று வேலை பார்த்து வருகின்றனர்.

அதில் சிறந்த வல்லுனர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், உயர் பதவிகளிலும், அரசு பதவிகளிலும் இருந்து வருகின்றனர்.

கடந்த 1992 ஆம் ஆண்டு இம்மாணவ}மாணவிகள் படிப்புகளை முடித்துவிட்டு வெளியே சென்றவர்கள் 31 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இதே கல்லூரியில் படித்த வகுப்பறையிலேயே சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கல்லூரி முதல்வர் முனைவர் குமார் , துணை முதல்வர் ஆரோக்கியராஜ், முன்னாள் முதல்வர் தங்கமணி முன்னிலையில் 1989-92 ஆம் ஆண்டு பயிற்றுவித்த பேராசிரியர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

முன்னாள் மாணவர்கள் பயின்ற விதம் பிறகு படிப்படியாக முன்னேறி வெளியூர்களுக்கு சென்று திறம்பட வாழ்க்கையை நடத்தி வருகின்ற விதம் குறித்தும் ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுபவங்கள் குறித்தும் கருத்துக்களை நெகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினர்.

தாங்கள் படித்த வகுப்பறையில் நிகழ்வுகளை நடத்தி நினைவு பரிசுகளையும் வழங்கினர். இதில் வெளிநாடுகளில் இருந்து வரமுடியாத முன்னாள் மாணவர்கள் ஜூம் மீட் மூலம் இணைந்து தங்களது பசுமையான நினைவுகளை பகிரிந்துக்கொண்டனர்.

முன்னாள் மாணவ மாணவிகள் 31 ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்து ஒருவருக்கொருவர் கருத்துக்களையும், அனுபவங்களையும் எடுத்துக் கூறியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

31 ஆண்டுகளுக்குப்பிறகு சந்தித்த தங்கள் நண்பர்களின் அருகில் அமர்ந்து சந்தோஷத்தில் மூழ்கினர். தாங்கள் படித்த கல்லூரிக்கு தங்களது பங்களிப்பாக மாணவர்கள் இணைந்து ரூ.2.30லட்சம் செலவில் 5 குளிர்சாதன பெட்டிகளை கருத்தரங்கத்திற்கு அமைத்துக்கொடுத்து மகிழ்ந்தனர்.

# அறந்தாங்கி பைட்டிங் ஸ்டார்ஸ் அகாடமியின் கூடைப்பந்து பயிற்சி முகாம்

அறந்தாங்கி, ஜூன்.6-

அறந்தாங்கி பைட்டிங் ஸ்டார்ஸ் அகாடமியின் 9ம் ஆண்டு இலவச கூடைப்பந்து பயிற்சி முகாம் நிறைவு விழா நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அறந்தாங்கி பைட்டிங் ஸ்டார்ஸ் அகாடமியின் 9ம் ஆண்டு இலவச கூடைப்பந்து பயிற்சி முகாம் நிறைவு விழா நடைபெற்றது. இந்த விழாவில் பாஜக மாநில மகளிர் அணி செயலாளர் கவிதாஸ்ரீகாந்த் உள்ளிட்ட முக்கிய பிரமுகர் கலந்துகொண்டுவெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு கோப்பைகளும் சான்றிதழ்களும் வழங்கினர்.

கோடை விடுமுறையை முன்னிட்டு இலவசமாக பள்ளி மாணவ மாணவிகளுக்கு கூடைப்பந்த பயிற்சி பாடம் அளிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஒன்பதாவது ஆண்டாக பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு நிறைவு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் 26வது தமிழ்நாடு மாநில ரேப்பிட் விரைவு சதுரங்கப்போட்டி மற்றும் 25வது பிளிட்ஸ் செஸ் போட்டி

புதுக்கோட்டை, ஜூன்.6-

விரைவு சதுரங்கப்போட்டி மற்றும் 25வது பிளிட்ஸ் செஸ் போட்டி செந்தூரான் கல்லூரியில் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்ட சதுரங்க சங்க தலைவர் எஸ். ராமசந்திரன் தலைமையில், மாவட்ட செஸ் சங்க நிர்வாகிகள் இப்போட்டியினை சிறப்பாக நடத்தினர் மாநிலத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் இருநூற்றுஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்டு விளையாடினர்.



போட்டியினை சர்வதேச செஸ் நடுவர் ஆனந்த பாபு, தலைமையில் நடுவர்கள் நடத்தினர். வெற்றியாளர்கள் ராபிட் விரைவு செஸ் போட்டியில் பிளிட்ஸ் போட்டியில் முதல் பரிசை சிவகங்கையை சேர்ந்த தினேஷ் ராஜனும், இரண்டாம் பரிசை கோவையைசேர்ந்த ஜி. ஆகாஷும், மூன்றாமிடத்தை சிவகங்கை ரோஹித்தும், நான்காமிடத்தை செங்கல்பட்டை சேர்ந்த விக்னேஷும், ஐந்தாமிடத்தை கன்னியாகுமரியை சேர்ந்த பெமில் செல்லத்துரையும் பெற்றனர். பிளிட்ஸ் போட்டியில் முதல் பரிசை சிவகங்கையை சேர்ந்த தினேஷ் ராஜனும், இரண்டாம் பரிசை கோவையைசேர்ந்த ஜி. ஆகாஷும், மூன்றாம் பரிசை சென்னையை சேர்ந்த கே.பி. ஆகாஷும், செங்கல்பட்டை சேர்ந்த விக்னேஷ் நான்காமிடமும், விழுப்புரத்தை சேர்ந்த கோகுல் ஐந்தாம் பரிசும் உட்பட ரொக்கப் பரிசுகளும், ,வெற்றி கோப்பைகளும், சான்றிதழ்களையும் புதுக்கோட்டை மாவட்ட செஸ் சங்க தலைவர் எஸ். ராமசந்திரன் வழங்கிவாழ்த்திப்பேசினார் மாவட்ட சதுரங்ககழக செயலர் பேராசிரியர் கணேசன் மற்றும் பொறுப்பாளர்கள் .அடைக்கலவன் மற்றும் அங்கப்பன், சர்வதேச செஸ் நடுவர்கள் தினகரன், ஆனந்தபாபு ஆகியொர் கலந்து கொண்டனர்.

# கந்து வட்டியினரிடமிருந்து காப்பாற்ற கோரி காங்கிரஸ் வட்டார மகளிரணித் தலைவி தலைமையில் ஆட்சியரிடம் கோரிக்கை மனு

தென்காசி, ஜூன்.6-

தென்காசி மாவட்டம் கடையம் வட்டார மகளிர் அணித் தலைவி சீதாலட்சுமி தலைமையில் 20க்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகளுடன் கந்துவட்டிக் கும்பல் கொடுமையில் இருந்து தங்களை காப்பாற்ற கோரி மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரனிடம் கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில்கூறியிருப்பதாவது, நான் காங்கிரஸ் கட்சியின் கடையம் வட்டார மகளிர் அணித் தலைவியாக இருந்து வருகிறேன், கந்து வட்டி கும்பல்கள் கடந்த சில மாதங்களாக அப்பாவி பெண்களிடம் குறைந்த வட்டிக்கு பணம் தருகிறோம் என்று ஆசை வார்த்தை கூறி மகளிர் சுய உதவிக் குழு என்ற போலியான வாக்குறுதி கொடுத்து 11% வட்டி என்ற வாக்கு கொடுத்து 20 முதல் 40% என்ற விகிதத்தில் வசூல் செய்து வருகின்றனர். இதை தடுக்கும் வண்ணம் முதல்வருக்கும் தங்களுக்கும் தபால் மூலம் மனு அனுப்பப்பட்டு அந்த மனுவின் மீது கடையம் காவல்துறை அதிகாரி நடத்திய விசாரணையில் தங்கள் நிறுவனம் அரசு அனுமதி பெற்று இருக்கிறது என்றால் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினர் இதுபோன்ற வட்டி கும்பல்களிடம் வரவு செலவு வைக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தினர்.



இதை மகளிர் ஏற்று அரசு அனுமதி அளித்த மகளிர் சுய உதவி குழுவில் இணைந்தனர், ஆனால் இன்னும் சில கந்துவட்டி கும்பல்கள் அதாவது அனுக்கிரஹா தொண்டு நிறுவனம், எல்என்டி, எஸ் எஸ் ஏ, மதுரா மைக்ரோ பைனான்ஸ், கிராம விடியல், மகா சேமம், ஆசீர்வாத் மைக்ரோ பைனான்ஸ்,போன்ற பல்வேறு நிறுவனங்கள் அப்பாவி பெண்களை மிரட்டி வருகின்றனர். எனவே இது போன்று மக்களை சீரழிக்கும் கந்துவட்டி கும்பலை கண்டறிந்து நிரந்தரமாக அவர்களை தடை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவினை கடையம் வட்டார காங் மகளிர் அணித் தலைவி சீதாலட்சுமி தலைமையில் 20க்கும் மேற்பட்ட பெண்கள் குழந்தைகளுடன் வந்து அளித்தனர்.



செயல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள பூதூர் ஊராட்சியில் அங்கன்வாடி மையம் இயங்கி வந்தது இந்த அங்கன்வாடி மையம் உள்ளது இந்த அங்கன்வாடி மையம் சேதமடைந்து உள்ளது இந்த நிலையில் இந்த அங்கன்வாடி மையத்தினை சரி செய்யக்கோரி மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர் இந்த கோரிக்கையின் அடிப்படையில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 11.15 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தனர். அதன்பின் அங்கன்வாடி குழந்தைகளுக்கு உணவு அருந்தும் தட்டு காலணிகள் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விளையாட்டை ஊக்குவிக்கும் விதமாக கிரிக்கெட் வீரர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய குழு தலைவர் கீதா கார்த்திகேயன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் கார்த்திகேயன் அதிமுக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்



மதுரை யானை கல்லில் உள்ள சுதந்திர போராட்டாக்காரரும், தொழிற்சங்க தலைவரும், வழக்கறிஞர், பத்திரிகையாளரும், கைரேகை சட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்திய வெற்றி நாயகரும், தேசபக்தர் பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் -ன் 136 வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக நவமணி ஐயா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்தபோது எடுத்த படம். உடன் ஆசைக்குமார், சிவபாண்டி, சர்வேர் ஜெயராஜ், ராமகிருஷ்ணன், கருப்பு பட்டரை பரமன், வழக்கறிஞர் தமிழ்ச்செல்வி ஆகியோர் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை காந்தி நகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை சிறப்பிக்கும் வகையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மங்கையர்கரசி தலைமை வகித்தார், ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி காப்பாளர் ஈஸ்வரன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் இராமு.தர்மராஜ், தமிழ்நாடு அனைத்து பதிவுற்ற மருந்தாளுநர்கள் நல சங்கத்தின் மாநிலத் தலைவர் கார்த்திக், சமூக ஆர்வலர்கள் தனபாலகிருஷ்ணன், ஜெகன், இதயம் முரளி, மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆதனக்கோட்டையில் மரக்கன்று நடும் விழா

ஆதனக்கோட்டை, ஜூன்.6-

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆதனக்கோட்டை வீரடி விநாயகர் ஆலயத்தில் 50 - க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட வீரடி விநாயகர் ஆலய சுற்றுப்புறத்தில் மலைவேம்பு ,தேக்கு, தானி, பலா புங்கை, இலுப்பை உள்ளிட்ட பல்வேறு வகையான 50 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நடப்பட்டன.



புதுக்கோட்டை மருத்துக்கல்லூரி பேராசிரியரும் மருத்துவருமான சரவணன் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை தொடக்கி வைத்து கூறியதாவது

ஒவ்வொரு மரங்களும் வாழ்நாள் முழுவதும் கார்பன்டை ஆக்சைடு பெற்றுக்கொண்டு நல்ல ஆக்சிஜனை தருகின்றது. இதில் ஹைட்ரஜன் 78 சதவீதமும் ஆக்சிஜன் 21 சதவீதமும் மற்ற வாயுக்கள் 1 சதவீதமும் நிரம்பி உள்ளது. இனி வரும் காலங்களில் காற்றை காசுகொடுத்து வாங்காமல் இருக்க காற்று மாசு படாமலும் புவி வெப்பமயமாகாமலும் வரும்முன் காப்போம் என்ற அடிப்படையில் அதிகமான மரக்கன்றுகளை நட்டு வைத்து வளர்த்து இயற்கை வளங்களை பாதுகாத்து அடுத்து வரக்கூடிய தலைமுறை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என கூறினார். இந்த நிகழ்வில் புதுக்கோட்டை கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமரேசன் ஆலய நிர்வாகி கருணாநிதி உள்ளிட்ட திரளான பொதுமக்கள் இளைஞர்கள் மாணவர்கள் ஆர்வமாக கலந்துகொண்டுகலந்து மரக்கன்றுகளை நட்டனர், மரக்கன்று நடுவோம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கம்

அரியலூர், ஜூன் .6-

ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் கலைஞரின் நூற்றாண்டு விழா தொடங்கியது, இது பற்றி ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஜெயங்கொண்டம் நகரில், முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஜெயங்கொண்டம் நகர தி.மு.க சார்பில், நகர திமுக செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான வெ.கொ. கருணாநிதி தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியம் முன்னிலையிலும், கடைவீதியில் இருந்து ஊர்வலமாக சென்று, பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அனுவித்து, டாக்டர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் உள்ளிட்டோரால், மலரஞ்சலி செலுத்தி கொண்டாடப்பட்டது. மேலும்,ஒடிசா மாநிலத்தில் இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட,நகர,வார்டு,வட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அதைத்தொடர்ந்து தா.பழூர் ஒன்றிய தி.மு.க அலுவலகம் எதிரில் அமைந்துள்ள, பெரியார், பேரறிஞர் அண்ணா, மக்கள் தொண்டர் க.சொ. கணேசன் ஆகியோரது முழு திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தும், திமுக அலுவலகம் முன்பு, அலங்கரிக்கப்பட்ட கலைஞர் உருவ படத்திற்கு, சட்டமன்ற உறுப்பினரும், திமுக தா பழூர் கிழக்கு ஒன்றிய செயலாளருமான க.சொ.க.கண்ணன், மாலை அனுவித்து, பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கினார்.

மேலும் ஒடிசா மாநிலத்தில், இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் இரா. அண்ணாதுரை, மாவட்ட விவசாய தொழிலாளரணி அமைப்பாளர் என்.ஆர். ராமதுரை, ஒன்றிய திமுக அவைத் தலைவர் எஸ். சூசைராஜ், பொருளாளர் த.நாகராஜன், ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன், ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ். ஆர்.தமிழ்ச்செல்வன், கோவி. சீனிவாசன், சி.கண்ணதாசன், தொமுச சம்பந்தம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ந.கார்த்திகைகுமரன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் த.குணசீலன் மற்றும் கிளை திமுக செயலாளர்கள், கட்சி தோழர்கள்,பொதுமக்கள் உள்பட பலர்

கலந்துகொண்டனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 500 டாஸ்மாக் கடைகள் விரைவில் மூடப்படும்: அமைச்சர் செந்தில் பாலாஜி

சென்னை,ஜூன்.6-

தமிழகத்தில் 500 டாஸ்மாக் கடைகள் விரைவில் மூடப்படும் என்று அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார். தமிழகத்தில் மொத்தம் உள்ள 5,329 மதுக்கடைகளில் 500 கடைகள் மூடப்படும் என சட்டப்பேரவையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவிப்பு வெளியிட்டார். அதனை தொடர்ந்து 500 டாஸ்மாக் கடைகளை மூடுவதற்கான கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டது.



இந்த நிலையில், தமிழகத்தில் 500 டாஸ்மாக் கடைகள் விரைவில் மூடப்படும்என்று அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "500 மதுக்கடைகளை இறுதி செய்யும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளது, பட்டியல் தயார் செய்யப்பட்டு வருகிறது. ஒரு வாரத்தில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும். 500 டாஸ்மாக் கடைகள் விரைவில் மூடப்படும். டாஸ்மாக் மதுபான கடைகளில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் பாதுகாப்புக்காக டாஸ்மாக் மதுபான கடைகளில் சி.சி. டி.வி. கேமராக்கள் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது, விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும்" என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# காவேரி கூக்குரல் இயக்கத்தின் மூலமாக ஆவுடையார்கோவிலில் உலக சுற்றுச்சூழல் தின விழா : இந்த வருடம் 1.1 கோடி மரங்கள் நடுவதற்கு இலக்கு

ஆவுடையார்கோவில், ஜூன்.6-

காவேரி கூக்குரல் இயக்கம் மூலமாக ஜூன் 5 தேதி புதுக்கோட்டை மாவட்டத்தில் இயற்கை விவசாயி சுப்பிரமணியின் பண்ணையில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் 1500 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. நிகழ்ச்சியில் ஹரிதாஸ்(புதுகை மாவட்ட வனக்காப்பாளர்),கணேசன்(திருவரங்குளம் வட்டார வனக்காவலர்) மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காவேரி கூக்குரல் சார்பாக இந்த ஆண்டு 1.1 கோடி மரங்கள் நடுவதற்கு இலக்கு நிர்ணயித்து, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று மரங்கள் நடும் பணி துவங்கப்பட்டுள்ளது. ஈஷா கடந்த 25 ஆண்டுகளாக சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான பணிகளை செய்துவருகிறது. காவேரி கூக்குரல் இயக்கம் தமிழக மற்றும் கர்நாடக மாநிலங்களில் காவிரி வடிநில பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் 242 கோடி மரங்களை நடும் மாபெரும் செயலை செய்து வருகிறது. மேலும் பல்வேறு இடங்களில் நடைபெறும் நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், தொழிலதிபர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கெடுக்கின்றனர். மரம் நடவு தவிர சைக்கிள் பயணம், மாரத்தான், விழிப்புணர்வு வாசக ஊர்வலங்கள் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றது. தற்போது நடவுக்காலம் துவங்கியுள்ளதால், மரக்கன்றுகள் நடும் பணியை ஈஷா காவேரி கூக்குரல் இயக்கம் மேற்கொண்டு வருகிறது. அதன்படி, காவேரி கூக்குரல் இயக்கம் மூலமாக, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், கோவை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட 36 மாவட்டம் மற்றும் பாண்டிச்சேரியில் ஜூன் 4, 5 ஆகிய தேதிகளில் மரக்கன்றுகள் நடும் விழாக்கள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் சுமார் 140 விவசாயிகள் தங்களது நிலங்களில் 1.6 லட்சம் மரக்கன்றுகளை நடவு செய்தனர். குறிப்பாக, தேக்கு, செம்மரம், சந்தனம், வேங்கை, மலைவேம்பு, மகோகனி, ரோஸ்வுட் போன்ற விலை மதிப்புமிக்க டிம்பர் மரங்களை விவசாயிகள் தங்களின் பொருளாதார தேவைகளுக்காக நடவு செய்தனர்.

உலக சுற்றுச் சூழல் தினம் தவிர, வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், நெல் ஜெயராமன், மரம் தங்கசாமி ஆகியோரின் நினைவு மற்றும் பிறந்த நாட்களில், லட்சக்கணக்கில் மரக்கன்றுகள் நடும் பணியை காவேரி கூக்குரல் இயக்கம் முன்னெடுத்து வருகிறது. இவர்கள் ஈஷாவின் பல்வேறு சுற்றுச்சூழல் பணிகளில் ஆரம்ப காலத்தில் இருந்து பக்கபலமாகவும், வழிகாட்டிகளாகவும் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.


மேலும் அனைத்து ஈஷா நாற்றுப் பண்ணைகளிலும் விவசாயிகளுக்குத் தேவையான மரக்கன்றுகள் 3 ரூபாய்க்கு மிகக்குறைந்த விலையிலேயே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மரம் சார்ந்த விவசாயம் குறித்து அறியவும், மரக்கன்றுகள் தேவைக்கும் 80009 80009 என்ற காவேரி கூக்குரல் உதவி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

# பள்ளிகள் திறப்பு மீண்டும் தள்ளி வைப்பு கடும் வெயிலால் தமிழ்நாடு அரசு அதிரடி அறிவிப்பு

*சென்னை,ஜூன்.6-*


*பள்ளிகள் திறப்பது தொடர்பாக முதல்-அமைச்சருடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.*

*2023-24-ம் கல்வி ஆண்டுக்கான பள்ளிகள் திறப்பு ஏற்கனவே ஒருமுறை மாற்றப்பட்டு 7-ந் தேதி அனைத்து வகையான பள்ளிகளும் திறக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்தது. கோடை வெயிலின் தாக்கம் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கல்வித்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் கோடை வெயிலின் தாக்கம் குறைந்தபாடில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பள்ளிகள் திறக்கப்படுமா? கல்வித்துறை பள்ளிகள் திறப்பு குறித்த அறிவிப்பை எதுவும் வெளியிடுமா? என்ற எதிர்பார்ப்பில் சமூக வலைதளங்களில் பலரும் பல விதமான கருத்துகளை பதிவு செய்து வருகின்றனர்.*



*இந்த நிலையில், தமிழகத்தில் 6 முதல் 12 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வரும் ஜூன் 12-ந் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. 1 முதல் 5 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 14-ந் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கோடைவெயிலின்தாக்கம் காரணமாக பள்ளிகள் திறப்பு மீண்டும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் திறப்பது தொடர்பாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆலோசனை நடத்திய பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும் துணைவேந்தர் மாநாட்டில் கவர்னர்

# தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைப்பு





# டாஸ்மாக் கடைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது


சென்னை / புதுக்கோட்டை | 06.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பி. எஸ். பி. பொன்னுசாமி , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1908) (இ.1998)



கோபிநாத் பர்தலை , அசாம் மாநிலத்தின் 1வது முதலமைச்சர் (பி.1890) (இ.1950)



ஜி. ராமகிருஷ்ணன் , தமிழக இடதுசாரி அரசியல்வாதி (பி.1949)



## இன்றைய நினைவு நாள்

மு. சி. பூரணலிங்கம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1866) (இ.1947)



ஆலங்குடி சோமு , தமிழகத் திரைப்பட பாடலாசிரியர், தயாரிப்பாளர் (பி.1932) (இ.1990)



ராஜமார்த்தாண்டன் , தமிழகக் கவிஞர், எழுத்தாளர் (இ.2009)



## தமிழீழ மாணவர் எழுச்சி நாள்